2019 ஜூலை 3]

கிளை நிலையம் அமைப்பதற்கு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, கால்நடை மருத்துவர்கள் இல்லை என்ற விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். கடந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்து, இன்றைக்கு ஏறத்தாழ 818 கால்நடை மருத்துவர்கள் தமிழகம் முழுவதும் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். இன்னும் காலியாக இருக்கின்ற 150 இடங்களை உடனடியாக நிரப்புவதற்குண்டான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

26—

வீட்டுமனைப் பட்டா

***26209—திரு. எஸ். சுதர்சனம்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், நெற்குன்றம் ஊராட்சி, மேட்டு சூரப்பட்டில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், நெற்குன்றம் ஊராட்சி, மதுரா மேட்டு சூரப்பட்டு கிராம புல எண் 79/9, மொத்த விஸ்தீரணம் 0.29.0 ஹெக்டேர், 81/1 மொத்த விஸ்தீரணம் 0.01.89 ஹெக்டேர், 81/12 மொத்த விஸ்தீரணம் 0.01.44 ஹெக்டேர் கிராம நத்தம் வகைப்பாடு கொண்ட நிலத்தில்

மொத்தம் 27 வீடுகள் உள்ளன. இதில் 12 வீடுகளுக்கு, ஒருமுறை வரன்முறைப்படுத்தும் திட்டத்தின்கீழ், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மீதமுள்ள 15 வீடுகளுக்கு, உரிய நடைமுறையைப் பின்பற்றி அம்மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீதமுள்ள 15 வீடுகளுக்கும் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே கிராமத்திலே, சர்வே எண் 72–ல், 13 ஹெக்டேர் நிலத்திலே ஏற்கெனவே 2000–ல் 43 வீடுகளுக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கின்றது. மீதமுள்ள 27 வீடுகளில் மக்கள் வசித்து வருகிறார்கள். அவர்களுக்கும் பட்டா வழங்க நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

சோழவரம் ஒன்றியம், அலமாதி ஊராட்சியில் சர்வே எண்கள் 85, 86, 87 மற்றும் கிருஷ்ணா நகரில் உள்ள 120 வீடுகளுக்கும், சர்வே எண்கள் 213, 219, 229, நேதாஜி நகரில் உள்ள 180 வீடுகளுக்கும் மற்றும் சர்வே எண் 83/1 விண்மீன் நகரில் உள்ள 50 வீடுகளுக்கும் பட்டா வழங்கப்படுமா என்பதை தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற மாதவரம் தொகுதியிலே, ஏற்கெனவே சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கும், பாண்டேஸ்வரம் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கும், சோழவரம் ஊராட்சி ஒன்றியம், நல்லூர் ஊராட்சிப் பகுதிகளுக்கும் மற்றும் மாதவரம் தொகுதியிலே, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட

2019 ஜூலை 3]

சூரப்பட்டு பகுதிகளுக்கும் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். பொதுவாக, ஆட்சேபகரம் இல்லாத அந்தப் பகுதிகளிலெல்லாம் குடியிருப்புமூலம் ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு ஒருமுறை வரன்முறைப்படுத்துகிற திட்டம்மூலம், அவர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தின்கீழேதான், அவர்களுக்குப் பட்டா கொடுக்கப்பட்டது. இதற்காக, 2 அரசாணைகள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் வெளியிடப்பட்டிருக்கின்றன. நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்ற காரணத்தினாலே, 3 மாத காலமாக அந்தத் திட்டம் செயல்படுத்தப்படாமல் இருந்தது. அது ஒருமுறை வரன்முறைப்படுத்துகிற திட்டம்; ஆட்சேபகரமான புறம்போக்கில் உள்ள இடங்களை குடியிருப்புமூலம் ஆக்கிரமணம் செய்தவர்களுக்கு வரன்முறைப்படுத்திக் கொடுப்பதற்காக அந்தத் திட்டம் இருக்கிறது. தற்போது தேர்தலை முன்னிட்டு, 3 மாத காலமாக அது செயல்படுத்தப்படவில்லை. கால அவகாசத்தின் நீட்டிப்புக்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான ஆணையைப் பெற்று, தகுந்த பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.*

முற்பகல் 10–50

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சியிலே 1990–1991–லே கிராம நத்தம் சர்வே எண்கள் 84/1ஏ, 84/1பி, 84/2–ல் உள்ள சுமார் 9.18 ஹெக்டேர் கிராம நத்தம் நிலம் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு மாற்றப்பட்டது. ஏற்கெனவே அங்கே இரண்டாயிரம் குடும்பங்கள் வசிப்பதினால், குடிசை மாற்று வாரியத்தால் எந்தவித அபிவிருத்தியும் செய்யப்படாமல் அப்படியே கிடப்பில் போடப்பட்டது. எனவே, மக்கள் எல்லாம், "குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக, எங்களுக்கு அபிவிருத்தி செய்யத் தேவையில்லை. மறுபடியும் வருவாய்த் துறைக்கு மாற்றி, எங்களுக்குப் பட்டா வழங்கப்பட வேண்டும்" என்று பலமுறை, பல ஆண்டுகளாகப் போராடி வருகிறார்கள். நானும் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே, குடிசை மாற்று வாரிய மேலாண்மை*

இயக்குநர் அவர்களைச் சந்தித்தேன். அவரும் அதற்கு இசைவு கொடுத்ததன்பேரில், 21–3–2018 அன்றே நம்முடைய வருவாய்த் துறை அதிகாரிகள், மாவட்ட ஆட்சியர் அவர்கள் மாற்றம் செய்துகொள்ளலாம் என்று கடிதம் அனுப்பியிருக்கின்றார்கள். ஒன்றரை ஆண்டுகாலமாக அது அப்படியே கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய பத்தாயிரம் பேர் வசிக்கின்ற இடம். அதனால், அந்தப் பேரூராட்சிக்கு வருவாய் கிடைக்காமல் எந்த மாற்றங்களுக்கும் உரிய நிலமாக இல்லாமல் அது அப்படியே இருக்கின்ற காரணத்தினால், நம்முடைய அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, சென்னையைச் சுற்றியுள்ள Belt area–வில், 32 கிலோ மீட்டர் பரப்பில், மக்கள் வசிக்கும் எந்தப் பகுதிக்கும், எந்த நிலத்திற்கும் பட்டா வழங்கக் கூடாது என்று ஒரு G.O. 496, நாள் 24-12-2018 வெளியிடப்பட்டதாக நாங்கள் அறிகின்றோம். எனவே, அதையும் தளர்த்தி, நிறைய மக்கள் வசிக்கின்ற இடங்களுக்கு நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பட்டா வழங்குவாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடிசை மாற்று வாரியத்திற்குக் கொடுக்கப்பட்ட நிலத்தை மீண்டும் வருவாய்த் துறையே எடுத்து, பொது மக்களுக்கு வழங்க வேண்டும் என்று ஒரு கோரிக்கையைச் சொல்லியிருக்கின்றார்கள். அதாவது, பொதுவாக ஊரகப் பகுதிகளிலே, ஆட்சேபகரமான அரசு புறம்போக்கு நிலங்களிலே நீண்டகாலமாக குடியிருப்பு உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, அவர்களுக்கு மாற்று இடங்களைக் கொடுத்து, அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா மாத்திரமல்ல; அவர்களை மறுகுடியமர்வு செய்வதற்காகத்தான், இதுபோன்ற நிலங்களை நாம் குடிசை மாற்று வாரியத்திற்குக் கொடுக்கின்றோம். அதை உரிய முறையில் அவர்கள் பயன்படுத்தவில்லை என்ற தகவலை இந்த மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். அதற்கான கருத்துருவும் தயார் செய்யப்பட்டு, உரிய அதிகாரிகளின் ஆய்வில் இருக்கிறது என்ற கருத்தையும் சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே, அதை உடனடியாகப்

2019 ஜுலை 3]

பரிசீலனை செய்து, அதை மறுபடியும் வருவாய்த் துறை எடுத்து, ஏழை மக்களுக்கு கொடுக்க சாத்தியக்கூறுகள் இருக்குமாயின், அதைக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம் ஆகிய இந்த மூன்று மாவட்டங்களிலும் உள்ள Belt area–வில் பொதுவாக நிலத்தின் மதிப்பு அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, குடியிருப்பு ஆக்கிரமிப்புகளை நாம் முறைப்படுத்த வேண்டுமென்ற வகையிலேதான் இதற்குத் தடையாணை இருக்கிறது. இருந்தபோதிலும்கூட, திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த எட்டு ஆண்டுகளில் மட்டும், அவர் சார்ந்திருக்கின்ற மாதவரம் தொகுதி உள்ளிட்ட பகுதிகளில், ஏறத்தாழ 96,995 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல, நம்முடைய மாநில அளவிலே, 32 வருவாய் மாவட்டங்களிலும் நாம் பார்த்தோமென்றால், 20 இலட்சம் என இலக்கு வைத்து, இதுவரை ஏறத்தாழ 23 இலட்சம் பட்டாக்களை கொடுத்திருக்கிற, ஏழையெளிய மக்களின் வாழ்விலே ஒளியேற்றி வைத்திருக்கிற அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் இந்த மாமன்றத்திலே நான் மகிழ்ச்சியோடு பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, இந்த Belt area–வில் தடையாணை உள்ள இந்த மாவட்டங்களிலே சிறப்பு நேர்வாக, அரசாணை (நிலை) எண் 465–ம், அரசாணை எண் 496–ம் என இரண்டு அரசாணைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கஜா புயலால் பாதிக்கப்பட்ட கூரை வீடுகள் கான்கிரீட் வீடுகளாகக் கட்டித் தரப்படும் என்றும், மனைப் பட்டா இல்லாதவர்களுக்கு மனைப் பட்டா வழங்கப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில்

அறிவித்திருந்தார்கள். இதுகுறித்து இப்போதைய நிலை என்ன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—55

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பேரிடர் காலங்களில் பாதிப்புகள் ஏற்படுகின்றபோது, உடனடியாக மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும். மாண்புமிகு அம்மாவினுடைய அரசை தலைமை தாங்கி வழி நடத்துகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மட்டும் போதாது; மறுகட்டமைப்பையும் உருவாக்க வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையில், இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற வகையிலே, முதல் முறையாக மறுகட்டமைப்புக்கென்று மூன்று I.A.S., அதிகாரிகளை நியமனம் செய்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கக்கூடிய ஒரு செயல் திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது. நாகப்பட்டினம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். அங்கு அதிகமாக கோயில் நிலங்கள் இருக்கிற காரணத்தினாலே, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அதிகாரிகளோடு கலந்து பேசி, அவர்களிடமிருந்து இடத்தைப் பெறுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து, கஜா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மட்டும் ஒரு இலட்சம் வீடுகள் கட்டித் தருவதற்கு சிறப்பு நேர்வாக அனுமதி வழங்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அதற்காக மூன்று உயர் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு, மறு கட்டமைப்புக்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2019 ஜூலை 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி தொகுதி, தூத்துக்குடி மாநகரப் பகுதியில் 32–வது மற்றும் 51–வது வார்டுகளுக்குட்பட்ட மினி சகாயபுரம், ஊரணி ஒத்தவீடு ஆகிய பகுதிகளில் மீனவ மக்கள் மற்றும் ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த ஏழையெளிய, நடுத்தர மக்கள் வசித்து வருகிறார்கள். அந்த இடம் மத்திய உப்பு இலாகாவுக்குச் சொந்தமான இடமாக இருக்கிறது. 30 ஆண்டுகளுக்கும் மேலாக அந்தப் பகுதியில் குடியிருந்து வரும் மக்கள், பட்டா கேட்டு நீண்ட காலமாகக் கோரிக்கை வைத்து வருகிறார்கள். இதுகுறித்து, மத்திய உப்பு இலாகா ஆணையரை அணுகி நான் பேசியபோது, அவர் 'தனி நபருக்கு நாங்கள் கொடுக்க இயலாது; ஆனால் அரசுக்குத் தர சம்மதிக்கிறோம்' என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், எனக்கும் எழுத்து மூலமாகப் பதில் தந்துள்ளார்கள். ஆகவே, வருவாய்த் துறையின் மூலமாக அந்த இடத்தை வாங்கி, அப்பகுதி மக்களுக்கு பட்டா கொடுக்க அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

அதேபோல, தூத்துக்குடியில், சுடலைக் காலனி, பூபால்ராயர்புரம் போன்ற பகுதிகளிலெல்லாம் அரசு நத்தம் புறம்போக்கில் 20 ஆண்டுகளுக்கும்மேல் குடியிருந்து வரும் மக்கள் பட்டா கிடைக்காமல் இன்னும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுத்திட வேண்டுமென்று, தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை வலியுறுத்தி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நலிந்த பிரிவினர்களின் முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையாக அவர்கள் வசிப்பதற்கு ஓர் இடம் தேவை. அந்த வகையிலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அதன்மீது உரிய பரிசீலனை செய்து, ஆங்காங்கே பட்டாக்களை வழங்கிக் கொண்டு வருகிறது. அதைத்தான், நான் ஏற்கெனவே சொன்னேன். ஏற்கெனவே, 20 இலட்சம் பட்டாக்களை வழங்க வேண்டுமென்ற இலக்கை*

நிர்ணயித்து, 23 இலட்சம் பட்டாக்கள் கொடுத்திருக்கிறோம். உப்பளங்களை அமைப்பதற்காக உப்பு வாரியத்திற்கும், ஏன், தனியார்களுக்கும் நாம் இடங்களைக் குத்தகைக்குக் கொடுத்திருக்கின்றோம். மத்திய உப்பு இலாகா அதற்குச் சொந்தமான இடத்தை அரசுக்குத் தர சம்மதித்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவையிலே சொல்லியிருக்கின்றார்கள். 'அவர்கள் அந்த இடத்தைத் தர முன்வருகிறார்கள், வருவாய்த் துறை அந்த இடத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்' என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அந்தத் தகவலை உறுதி செய்து, மத்திய உப்பு இலாகா அந்த இடத்தைத் தர முன்வந்தால், நிச்சயமாக அந்த இடத்தை ஏழை மக்களுக்கு வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நத்தம் புறம்போக்கைப் பொறுத்தவரையில், எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. அதில் குடியிருப்பு ஆக்கிரமணங்களாக இருந்தால், அதற்கென்று இரண்டு அரசாணைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் காரணமாக அந்த அரசாணைகள் செயல்படுத்தப்படாமல் இருந்தன. தற்போது அவற்றின் கால நீட்டிப்புக்காக நடவடிக்கையில் இருக்கின்றது. நிச்சயமாக, அதுகுறித்தும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, குடியிருப்பு ஆக்கிரமணங்களை வரன்முறைப்படுத்தி, பட்டா வழங்குவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் தொகுதி வருவாய்க் கோட்ட எல்லைக்குட்பட்ட இடங்களெல்லாம் தற்போது காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு, சென்னை மாவட்டத்தோடு இணைக்கப்பட்டுள்ளன. ஆனால், நீண்ட நெடு நாட்களாக அங்கு வாழ்ந்து வருகின்ற மக்களுக்கு குடியுரிமைப் பட்டா வழங்கப்படாமல் உள்ளது. 'சென்னை மாவட்டத்தோடு இணைக்கப்பட்டதால், சென்னை மாவட்டத்தில் belt area–வில்

2019 ஜூலை 3]

இருந்தால், பட்டா வழங்க முடியாத நிலை உள்ளது' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினருக்கு பதில் அளித்தார்கள். காஞ்சிபுரம் மாவட்ட எல்லைக்குட்பட்ட சில பகுதிகளில் பட்டா வழங்கலாம் என்ற நிலை முன்பு இருந்தது. அவர்களுக்கெல்லாம் காஞ்சிபுரம் மாவட்டத்திலேயே பட்டாக்களை வழங்கியிருந்தால், பின்னர், அந்தப் பகுதிகள் சென்னை மாவட்டத்தோடு இணையும்போது, இத்தகைய ஒரு நிபந்தனைக்கு அவர்கள் ஆளாகாமல், அவர்களுக்கு உரிய பட்டாக்கள் ஏற்கெனவே வழங்கப்பட்ட நிலையில், அவர்கள் குடியுரிமையைப் பெற்றிருப்பார்கள்.

*ஆனால், நான் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், சோழிங்கநல்லூர் பகுதியிலுள்ள சர்வே எண் 439, கிராம நத்தத்தில் பல ஆயிரம் குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். அந்தப் பகுதிக்கு இன்னும் பட்டா வழங்கப்படவில்லை. காரப்பாக்கம், சர்வே எண்கள் 160*B, *161*B, *123/3, 165, 170, 171/1, 172, 169/2, 170/2, 123/9 உள்ளிட்ட பகுதிகளில் ஏற்கெனவே பட்டா வழங்கப்பட்ட நிலையில், விடுபட்ட இடங்களாக இவை தற்போது இருக்கின்றன என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். அதேபோல, ஜல்லடையான்பேட்டை, திருவள்ளூர் நகர் சர்வே எண் 220–ல் பட்டா வழங்கப்படவில்லை. செம்மஞ்சேரி சர்வே எண்கள்* 337/12B, 337/12B *போன்ற பகுதிகளிலும், சர்வே எண்கள்* 37/12B3, 87/2, 395 *மற்றும் 337 போன்ற பகுதிகளிலும் பட்டா வழங்கப்படாமல் இருக்கின்றன.*

*அதேபோல, ஒக்கியம் துரைப்பாக்கத்தில் சர்வே எண்கள் 272/1*A *மற்றும் 262/2 போன்ற இடங்களும் பட்டா வழங்கப்படாமல் விடுபட்டுள்ளன. உள்ளகரம் சர்வே எண்கள் 90, 91 போன்ற பகுதிகளிலும் பட்டாக்கள் வழங்கப்படாமல் உள்ளன.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று, பல இடங்களில் பட்டாக்கள் வழங்கப்படாமல் இருக்கின்றன. புழுதிவாக்கம் சர்வே எண் 230/16, ஈஞ்சம்பாக்கம் பெத்தேல் நகர் பகுதியிலும் பட்டாக்கள் வழங்கப்படாமல் இருக்கின்றன. மடிப்பாக்கம் ஈஸ்வரன் கோயில்*

தெரு சர்வே எண் 212/2, 23/1A, 655, 101, 125, 122, 121, 118, 102, 101, 188, 23/1, 23/4 இவை அனைத்திற்கும் பட்டாக்கள் வழங்கப்படாமல் இன்னும் நிலுவையில் இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, இதுபோன்று விடுபட்ட இடங்களில் பட்டாக்களை உடனடியாக அரசு வழங்கிட வேண்டும். அதேபோல், தலைவர் கலைஞர் ஆட்சியிலும் சரி, இப்பொழுதும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் உங்களுக்கு வாய்ப்பு அளித்திருக்கிறேன். நீங்களே 5 நிமிடங்கள் பேசினால், நான் எப்படி மற்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளிக்க முடியும்? சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: அதேபோன்று கொடுக்கப்பட்ட பட்டாக்களில்கூட, அடங்கல், கிராம நத்தங்கள் குறித்த விவரங்கள் அனைத்தும் V.A.O. அலுவலகத்தால் கணினியில் ஏற்றப்படாமல் இருக்கின்றன. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அவற்றை உடனடியாகக் கணக்கில் ஏற்றிட ஏற்பாடு செய்வதோடு, விடுபட்ட பட்டாக்களை வழங்கிட வேண்டும். அதேபோன்று, அனாதீனமாக உள்ள இடங்களில் அவர்கள் நீண்ட நெடுநாட்களாக வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுக்கும் உடனடியாகப் பட்டா வழங்கிட வேண்டுமென்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், முடியுங்கள்.

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பட்டா வழங்கப்படாத இடங்கள் குறித்து சர்வே எண்களோடும், புள்ளி விவரங்களோடும் நீண்ட பட்டியலாக இந்த அவைக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதற்கு அவர் கூறிய காரணம், பெருநகரத்தில் சேர்க்கப்பட்ட காரணத்தினால், காஞ்சிபுரம் மாவட்டத்தில் முன்பிருந்த பகுதிகளுக்கு பட்டா கிடைக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். 200 வட்டங்களைக்

2019 ஜுலை 3]

கொண்டிருக்கின்ற மாநகராட்சி எல்லையோடு வருவாய் எல்லையும் ஒரே அளவீடாக இருக்க வேண்டும் என்கின்ற அடிப்படையில்தான், இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. அதன் அடிப்படையில்தான் இவ்வாறு எடுக்கப்பட்டது. அதற்கும், பட்டா வழங்காததற்கும் எந்தக் காரணமும் இல்லை. ஏனென்றால் belt area *என்று சொல்லக்கூடியவற்றில் சென்னையும் இருக்கிறது; காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகியவையும் இருக்கின்றன. அதற்காகத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். இதற்கு சிறப்பு நேர்வாக ஊரகப் பகுதிகளில் ஆட்சேபகரமான அரசு புறம்போக்கு நிலங்களில் நீண்டகால குடியிருப்புகளாக உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் மற்றும் மாற்று இடத்தில் வீட்டுமனைப் பட்டா, மறு குடியமர்வு வழங்குவது தொடர்பாக அரசாணை எண் 465 வெளியிடப்பட்டிருக்கிறது. அதேபோல், அரசு புறம்போக்கு நிலங்களில் நீண்டகால குடியிருப்புகளாக உள்ள ஆக்கிரமணங்களை வரைமுறைப்படுத்தி, வீட்டுமனைப் பட்டா வழங்குவது தொடர்பாக அரசாணை 496 வெளியிடப்பட்டுள்ளது. குடியிருப்புகளாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருப்பவர்களுக்காக இந்த இரண்டு அரசாணைகளும் வெளியிடப்பட்டுள்ளன. நம்* regular scheme*–ல் ஏழை எளியவர்களுக்குக் கொடுப்பதற்கு எந்தத் தடையாணையும் கிடையாது. குடியிருப்புகளாக ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்கள் 5 ஆண்டுகளுக்குமேல் அங்கு இருக்கிறார்களா என்பதையும் பார்த்து, அவர்களுடைய வருமான உச்சவரம்பையும் பார்த்து, அதற்கு அவர்கள் தகுதியுள்ளவர்களா என்பதையும் ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் நீங்கள் சொன்ன அந்தப் பட்டியலில் ஆக்கிரமணம் செய்திருப்பவர்கள், குடியிருப்பவர்கள் ஆகியோர் அனைவரும் தகுதியுள்ளவர்களாக இருந்தால், நிச்சயமாக அம்மாவுடைய அரசு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, பட்டா வழங்காததற்கு உறுப்பினர் குறிப்பிட்ட காரணம் சரியான காரணம் அல்ல என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*